## வணக்கம்!

### கல்வி – சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45 - 11:15)

வழமையான நேரத்தில் வழமைபோல் நடைபெறும்.

**-அன்னை தமிழ்முற்றப் போட்டிகள் 16.03.2024**
அன்னை தமிழ்முற்றப் போட்டிகள் 2024 விபரம் – எழுத்து மற்றும் ஒலிவடிவத்துடன்.

அன்னை முற்ற போட்டி விண்ணப்ப படிவம்

### கலைவகுப்புகள் - சனிக்கிழமை

வழமைபோல் நடைபெறும், மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

**-சங்கீத வகுப்பு மாணவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோருக்குமான தகவல்.**
சங்கீத ஆசிரியர் கலைச்செல்வி தனது சுய விருப்பத்திற்கேற்ப ஆசிரியப்பணியை தொடர முடியவில்லை என அறிவித்துள்ளார்.

பதிலாக எதிர்வரும் 27.01.2024 சனிக்கிழமை புதிய ஆசிரியர் தொடரவுள்ளார் என்பதை மாணவர்கள், பெற்றோர்களாகிய உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

அன்றே உங்கள் பிள்ளைகளுடன் இணைந்து உங்களையும் அறிமுகம் செய்து கொள்ளலாம்.

### ஆண்டுக்கூட்டம் 2024 – 02.03.2024 (புதிய திகதி)

ஆண்டுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் சார்பாக ஏதாவது விடையங்கள் கொண்டுவரவிரும்பின் எமக்கு 31.01.2024 இற்கு முன்னதாக மின்னஞ்சலினூடாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். வழங்கப்பட்ட நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கப்படும் விடையங்கள் மட்டுமே ஆண்டுக்கூட்டத்தில் கருத்தில் கொள்ளப்படும். ***ஏற்கனவே அறிவித்ததுபோல் முழுமையான உறுப்பினர் உரிமை பெற்றவர்கள் மட்டுமே ஆண்டுக்கூட்டத்தில் பங்கேற்கமுடியும்.***

### பொங்கல் விழா மீளாய்வுக் கூட்டம்

24.01.2024 நடைபெற்ற பொங்கல்விழா இணைய வழி மீளாய்வுக் கூட்டத்தில் பலவளாகங்கள் கலந்து கொண்டன. ஒவ்வொரு வளாகமும் தமது கருத்துகளை பகிரும் போது லோறன்ஸ்கூக் வளாகத்தை பாராட்ட தவறவில்லை. இது நமது ஒற்றுமைக்கும் இணைந்த செயற்ப்பாட்டுக்கும் கிடைத்த வெற்றி.

அந்த வகையில் இதற்க்கு உழைத்த சக நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்குழு பிரதிநிதிகள், தேநீர்ச்சாலைகுழு மற்றும் பெற்றோர்களுக்கும் நன்றி.

### பெற்றோர்குழு, பிரதிநிதிகள் உடன் நிர்வாக உறுப்பினர் சந்திப்பு

20.01.2024 அன்று நடைபெற்ற பெற்றோர்குழு, பிரதிநிதிகள் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் 1 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவிர்த்து கண்காணிப்பாளர்கள் அட்டவணை தயாரிக்க வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது. அதனடிப்படையில் கீழ்க்கட்டடம் மற்றும் மேற்கட்டடம் இரண்டையும் உள்ளேயும் வெளியேயும் கண்காணிப்பதற்கு பிரதிபலிப்பு அங்கி (refleks vest) உடன் காவற் பணியாளர்களின் கண்காணிப்புப் பணியை விரைந்து நடைமுறைப் படுத்தும் வண்ணம் பெற்றோர்குழுவை வேண்டிக் கொள்கின்றோம்.

இதில் ஏதும் ஐயப்பாடு இருந்தால் பெற்றோர்குழு தொடர்பாளரை தொடர்பு கொள்ளவும்.

**எமது வளாக இக்கல்வியாண்டில் நடைபெறவுள்ள நிகழ்வுகள்**

13.04.2024 சித்திரை விழா
09.06.2024 விளையாட்டுப்போட்டியும்கல்வியாண்டு நிறைவும் .

குறிப்பு: சூழ்நிலைக்கேற்ப வரும்மாற்றங்களுக்கு எம்மை புரிந்துணர் வோடு தயார்நிலைப்படுத்துவோம்.

**நிதி**

இதுவரை அறவிடப்பட்ட அனைத்து கட்டணங்களையும் செலுத்தும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.

**சிற்றுண்டிச்சாலை**

**இவ்வாரம் வழமைபோல் இயங்குநிலையில் இருக்கும்**. 10:15 முதல் மேல்க்கட்டிடத்தில் சிற்றுண்டிகள் விற்பனையில் இருக்கும் அனைவரும் அவ்வேளை வந்து பிள்ளைகளுக்காகவோ அல்லது தங்களுக்காகவோ தேவையானவற்றை வாங்கலாம். ***தாங்கள் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் அல்லது தேனீர் அருந்தும் கோப்பைகள் இருப்பின் அவற்றை அப்புறப்படுத்தி சுத்திகரித்துச் செல்லல் வேண்டும்.***
***புரிந்துணர்வுக்கு நன்றி.***

**முக்கிய கவனம் மற்றும் வேண்டுகோள்!**

1.மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.

2.கற்பித்தல் நேரங்களில் கீழ்க்கட்டிடத்தினுள் எந்தப் பெற்றோரும் காத்திருப்பதற்கு ஒப்புதல் இல்லை.

3.பாடசாலையில் தீப்பிடித்ததற்கான அறிகுறியை அறிவிக்கும் அபாயமணி ஒலிக்கும்பட்சத்தில் (Brannalarm), அனைவரும் கட் டிடங்களிலிருந்து தாமதமெதுவுமின்றி வெளியேறவேண்டும். அனைவரும் அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி (brannbil, ambulanse osv) வாகனத்தரிப்பிடத்திலுள்ள கொடிக்கம்பத்தினருகே ஒன்றுகூடவேண்டும்.

வகுப்பிலுள்ள மாணவர்களை வெளியே கூட்டிவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும். பெற்றோர்கள் வகுப்பறை நோக்கிச் செல்வதற்கு அனுமதியில்லை.

எப்பொழுதும் வாகனங்களை அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி (brannbil, ambulanse osv) நிற்பாட்டுதல் அவசியமென்பதை நினைவிற்கொள்க!

எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப் பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம். தொலைபேசி இல. 918 75 537.

## தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!

நன்றி.

இவ்வண்ணம்
நிர்வாகம்
**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக்**